**மொனராகலை மாவட்டத்தின் 18 கமநல சேவைச் செயற்குழுக்கள் - 2024**

---

**1. கணக்காய்வு அபிப்பிராயம்**

1.1 மொனராகலை மாவட்டத்தின் 18 கமநலசேவை செயற்குழுக்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கு உரித்தான குறிப்புகள் மற்றும் சுருக்கமான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரைகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 58 (1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** மொனராகலை மாவட்டத்தின் 18 கமநலசேவை செயற்குழுக்களின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வழங்கப்பட்டமைக்குக் காரணங்களாக அமைந்த பொருண்மையான தவறுகள் கீழே தரப்பட்டுள்ளன.

**1.3 நிதிக்கூற்றுக்கள்**

**1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உட்பட கணக்கீட்டு கொள்கைகளுடன் இணக்கமின்மை**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | கமநல வங்கி, கமநல சேவைச் செயற்குழுவின் ஒரு அலகாக இருந்த போதிலும் மொனராகலை மாவட்டத்தின் 18 கமநல சேவைச் செயற்குழுக்களின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தலைமை அலுவலகத்தில் ஆலோசனைகளைப் பெற்று இனிவரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் படி கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோரை ஈடு செய்யலாகாத போதிலும், தம்பகல்ல கமநல சேவைச் செயற்குழுவின் பெற வேண்டிய உரச் செயலகக் கணக்கில் காணப்பட்ட ரூபா 37,770 வரவு மீதி, செலுத்த வேண்டிய இலங்கை உரக் கம்பனிக் கணக்கின் செலவு மீதியுடன் ஈடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்கால நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கிடப்படுமவதாக | கணக்கீட்டு நியமங்களுக்கமைய செயற்பட வேண்டும். |

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 03 செயற்குழுக்களுக்குச் சொந்தமான ரூபா 3,569,407 பெறுமதியுடைய பௌதீக | எதிர்கால நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கிடப்படும். | முறையான ஆய்வை மேற்கொண்டு சொத்துக் களை அடையாளம் கண்டு |

| | | | |
|---|---|---|---|
| | ரீதியாகக் காணப்படாத 12 சொத்துக்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தன. | | கணக்கிட்டு கணக்குகளில் சீராக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 03 செயற்குழுக்களின் ரூபா 5,423,576 பெறுமதியுடைய நடைமுறைச் சொத்துக்கள் குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தன. | எதிர்கால நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கிடப்படும். | நடைமுறைச் சொத்துக்கள் சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | 06 செயற்குழுக்களினால் ஈட்டத்தக்க பெறுமதி அற்ற ரூபா 3,940,202 பெறுமதியான கையிருப்புகள் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தன. | எதிர்கால நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கிடப்படும். | கணக்கீட்டு நியமங்களுக் கமைய பெறுமதியை அடையாளம் கண்டு கணக்கிட வேண்டும். |
| (ஈ) | 16 செயற்குழுக்களுக்குச் சொந்தமான 19 காணிகள், ஒரு செயற்குழுவிற்குச் சொந்தமான 09 கட்டிடங்கள், 02 செயற் குழுக்களுக்குச் சொந்தமான 05 இயந்திர உபகரணங்கள் மற்றும் 11 செயற்குழுக்களுக்குச் சொந்தமான 281 அலுவலக உபகரணங்களின் பெறுமதி அடையாளம் காணப்பட்டுக் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்கால நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கிடப்படும். | சரியான பெறுமதியை அடையாளம் கண்டு கணக்கிட வேண்டும். |
| (உ) | 03 செயற்குழுக்களின் ரூபா 2,973,046 பெறுமதியுடைய 04 கணக்கு மீதிகள் போலியான பொறுப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | எதிர்கால நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கிடப்படும். | செலுத்தப்பட வேண்டியதாக உறுதிப்படுத்த முடியாத மீதிகள் தொடர்பில் முறையான அனுமதியின் கீழ் பொருத்தமான வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் செலுத்த வேண்டிய மீதிகளை அடையாளம் கண்டு விரைவாக தீர்த்துவைக்க வேண்டும். |
| (ஊ) | மொனராகலை கமநல சேவைச் செயற்குழுவின் 2023 ஆம் ஆண்டில் இரு கணக்கு மீதிகளில் ஏற்பட்ட ரூபா 87,880 கூட்டல் வழுக்கள் மீளாய்வாண்டிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்கால நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கிடப்படும். | உரிய கணக்கு விடயங்களில் சீராக்கங்களைச் செய்து திருத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 03 செயற்குழுக்களின் ரூபா 1,524,015 பெறுமதியுடைய வருமானங்கள் குறைவாகவும், 03 செயற்குழுக்களின் ரூபா 138,440 பெறுமதியுடைய வருமானம் அல்லாத விடயங்கள் வருமானமாகவும் கணக்கிடப்பட்டிருந்தன. | எதிர்கால நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கிடப்படும். | வருமானத்தைச் சரியாக அடையாளம் கண்டு கணக்கிடப்பட வேண்டியதுடன் கணக்குகளிலும் சீராக்கப்பட வேண்டும். |
| (ஏ) | மொனராகலை கமநல சேவைச் செயற்குழுவின் ரூபா 120,551 பெறுமதியுடைய செலுத்த வேண்டிய இறைவரி அறவீடுகள் குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தன. | எதிர்கால நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கிடப்படும். | நடைமுறைப் பொறுப்புக் களின் பெறுமதியைச் சரியாக அடையாளம் கண்டு கணக்கிடப்பட வேண்டும். |
| (ஐ) | 07 செயற்குழுக்களின் ரூபா 13,010,130 பெறுமதியுடைய நடைமுறையல்லாச் சொத்துக் கள் குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தன. | எதிர்கால நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கிடப்படும். | நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதியைச் சரியாக அடையாளம் கண்டு கணக்கிடப்பட வேண்டும். |
| (ஒ) | 05 செயற்குழுக்களின் ரூபா 233,188 பெறுமதியுடைய மூலதனச் செலவுகள் வருமானச் செலவுகளாகக் கணக்கிடப்பட்டிருந்தன. | எதிர்கால நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கிடப்படும். | சரியான வகைப்படுத்தல் களுடன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன், உரிய சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |
| (ஓ) | ஹிங்குருகடுவ கமநல சேவைச் செயற்குழுவின் ரூபா 104,976 பெறுமதியுடைய 02 செலவுக் கணக்கு மீதிகள் குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தன. | எதிர்கால நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கிடப்படும். | செலவுகளைச் சரியாக அடையாளம் கண்டு கணக்கிடப்பட வேண்டும். |
| (ஔ) | 2000 ஆம் ஆண்டில் விதைப் நெல் உற்பத்திக்காக புத்தல ஜனதா விவசாயக் கம்பனிக்கு புத்தல கமநல வங்கியினால் ரூபா 1,500,000 வழங்கப்பட்டிருந்தது. விவசாயக் கம்பனியினால் கடன் பணம் செலுத்துவது தவறியமையால் 2010 நவம்பர் 11 ஆம் திகதி வரை கடன் வட்டியாகக் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய வட்டி ரூபா 2,382,758 கணக்கிடப்பட்டிருந்தது. எனினும் கடன் வட்டி வருமானம் ரூபா | எதிர்கால நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கிடப்படும். | சரியாகக் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், முறையான வேலைத்திட்டமொன்றின் கீழ் எஞ்சியுள்ள மீதியை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2,395,189 என கமநல வங்கியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 12,431 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. | | |
| (க) | நீதிமன்றக் கட்டளைகளுக்கமைய கடன் அறவீடுகளான ரூபா 61,214 உரிய கடன்பட்டோர் கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்கால நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கிடப்படும். | கடன்பட்டோரை அடையாளம் கண்டு கணக்குகளில் சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |
| (ங) | மெதகம கமநல சேவைப் பிரிவின் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காகப் பெறப் பட்டிருந்த மிளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட 91,987 கிலோகிராம் உரத்தின் பெறுமதி அடையாளம் காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்கால நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கிடப்படும். | மீதமுள்ள கையிருப்புப் பெறுமதிகளைச் சரியாக அடையாளம் கண்டு கணக்கிடப்பட வேண்டும். |

**1.3.3 இணக்கமற்ற கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | 08 கமநல சேவைச் செயற் குழுக்களுக்குச் சொந்தமான 16 கணக்கு விடயங்களின் கீழ், நிதிக்கூற்றுக்களின் பெறுமதிகளை அதற்குரிய ஏனைய அறிக்கைகளுடன் ஒப்பிடும் போது ரூபா 7,140,270 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்கால நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படும் | ஒப்பிட்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மொனராகலை கமநல சேவைச் செயற்குழுவிற்குச் சொந்தமான ரூபா 90,733 பெறுமதியுடைய 04 சொத்து மீதிகள் மற்றும் மொனராகலை, பிபிலே கமநல சேவைச் செயற் குழுக்களுக்குச் சொந்தமான ரூபா 2,005,958 பெறுமதியுடைய 18 பொறுப்பு மீதிகள் தொடர்பான கடன்பட்டோர் பதிவேட்டு மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள், கடன் கொடுத்தோர் பதிவேடு, பிணை வைப்பு பதிவேடு சமர்ப்பிக்கப்படாமையினால் | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள அனைத்து மீதிகளையும் உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எழுத்துமூலச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

கணக்காய்வின் போது திருப்திகரமாக உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம் | | | | |
| (i) | 51(7) ஆம் உப பிரிவு | | 18 கமநல சேவைச் செயற்குழுக்களிலும் கமநல அபிவிருத்திச் சபையின் தலைவரை நியமித்தல், தலைவரின் கடமைகள், நிலையியற் குழுக்களை நியமித்தல் மற்றும் செயலாளர் மற்றும் பொருளாளரைத் தெரிவு செய்தல் தொடர்பான கட்டளைகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும் என்பதுடன், இணங்காத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 54(1) ஆம் உப பிரிவு | | 18 கமநல சேவைச் செயற்குழுக்களிலும் உள்ள ஒவ்வொரு விவசாயக் காணியினதும், காணி உரிமையான விவசாயி அல்லது அனுபவவிப்பவரால், அந்த காணி அமைந்துள்ள அதிகாரப் பிரதேசத்தின் கமநல அபிவிருத்திச் சபைக்கு குறித்த காணி தொடர்பான முறையான விபரங்கள், அதன் உரிமை, தற்கால வதிவிடம் எமற்றும் குறித்த சபையினால் குறிப்பிடப்படும் ஏதேனும் காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட அனைத்து விவசாய நடவடிக்கைகள் குறித்த | முகாமைத்துவத்தின் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | மேற்படி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தகவல்களும் ஆவணத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | 55(1) ஆம் உப பிரிவு | 18 கமநல சேவைச் செயற்குழுக்களின் ஆணையாளர் நாயகத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, ஒவ்வொரு கமநல அபிவிருத்திச் சபையாலும், தமது அதிகாரப் பிரதேசத்தினுள் உள்ள விவசாய காணிகளை அளவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி |
| (iv) | 53(4) ஆம் உப பிரிவு | 18 கமநல சேவைச் செயற்குழுக்களினதும் விவசாய வயல் காணிகளின் பெயர்ப்பட்டியல்கள் ஒவ்வொரு 03 வருடங்களுக்கு ஒருமுறை ஆணையாளர் நாயகத்தினால் பரிசோதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அத் தேவைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 | 16 செயற்குழுக்களிலும் 13 கமநலவங்கிகளிலும் மீளாய்வாண்டிற்குரிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளரின் அறிவுறுத்தல்களின் படி நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் படியும் நிதிப் பிரமாணத்திற்கு அமைவாகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் இணங்காத தரப்பினருக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | | |
| (ஈ) | நிதிப் பிரமாணம் 188(2) | 120,682 | அலுத்வெவ கமநல சேவைச் செயற்குழுவினால் வைப்புச் செய்யப்பட்ட போதிலும் வசூலிக்கப்படாத 02 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 396(ஈ) | 90,158 | 03 செயற்குழுக்களினால் விநியோகிக்கப்பட்டு 06 மாதங்கள் கடந்தும் கொடுப்பனவுக்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப் படாத 08 காசோலைகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்களுக்கு அமைய செயற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | | | | |
| (i) | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 04/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.4.11 பந்தி | | தம்பகல்ல விவசாய வங்கியிலிருந்து கடன் பெற்ற விவசாயிகளுக்காக விவசாய அனர்த்தக் காப்புறுதிக் கணக்கொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்பட வேண்டும் என்பதுடன், இணங்காத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ’ |
| (ஐ) | 2014 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 07/2014 (107 ஆம் இலக்க திருத்தம்) சுற்றறிக்கை | | நாளாந்தம் வைத்திருக்கக்கூடிய அதிகபட்சப் பணத் தொகை ரூபா 10,000 ஆக இருந்த போதிலும், 06 செயற்குழுக்களால் அந்த எல்லையைத் தாண்டி 99 சந்தர்ப்பங்களில் மேலதிகப் பணத் தொகை | எதிர்காலத்தில் சரியாகச் செயற்படுவதாக. | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (iii) | 1981 ஒக்டோபர் 16 ஆம் திகதிய 107 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 21.2 பந்தி | | கமநல சேவை நிலையத்தின் செயலாளரினால் குறைந்தது இரண்டு வாரங்களுக்கு ஒருமுறையாவது கையிருப்புப் புத்தகத்தைப் பரிசோதித்து, அதில் உள்ள விபரங்கள் சரியென உறுதிப்படுத்தி கையொப்பமிட வேண்டும், எனினும் தனமல்வில, ஒக்கம்பிட்டிய, பிபிலே மற்றும் படல்கும்புர ஆகிய 04 கமநல சேவை நிலையங்களில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி |
| (உ) | 2023 ஜனவரி 26 ஆம் திகதிய 7/5/9/-05 (மெஹெ.பொ) 1 ஆம் தொகுதி சுற்றறிக்கை மற்றும் 2006 பெறுகை வழிகாட்டிக் கோவை | 30,768,602 | சியம்பலாண்டுவ மற்றும் கதிர்காமம் ஆகிய 02 கமநல சேவைச் செயற் குழுக்களினால் 2024 ஆம் ஆண்டில் விவசாய உபகரணங்கள், விவசாய இரசாயனப் பொருட்கள், கன்றுகள் மற்றும் உரங்களைக் கொள்வனவு செய்யும் போது குறித்த ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | வழிகாட்டிக் கோவைக்கு இணங்கச் செயற்பட வேண்டியதுடன் அவ்வாறு செயற்படாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மொனராகலை மாவட்டத்தின் 14 கமநல சேவைச் செயற்குழுக்களிற்காக மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 15,983,518 மிகையாகவும், 04 கமநல சேவைச் செயற்குழுக்களிற்காக ரூபா 1,171,855 பற்றாக்குறையாகவும் காணப்பட்டது. இதற்கமைய ஒட்டுமொத்த மிகை ரூபா 14,811,663 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் ஒட்டுமொத்த மிகை ரூபா 17,088,510 ஆனமையால் நிதிப் பெறுபேறுகளில் ரூபா 2,276,847 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. வருமான வழிகளை மேம்படுத்தாமை மற்றும் செயற்பாட்டுச் செயற்பாடுகளின் செலவுகள் அதிகரித்தமை இவ்வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாகின.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறமையின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தனமல்வில கமநல சேவைச் செயற் குழுவின் ரூபா 121,950 பெறுமதியான உரக் கையிருப்பு மற்றும் 03 கமநல சேவைச் செயற் குழுக்களின் பெறுமதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிராத 04 இயந்திரங்கள், 54 அலுவலக உபகரணங்கள் தொடர்பாக அகற்றுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டிருந்தும் அகற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான நடைமுறையின் கீழ் அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 17 செயற்குழுக்களினால் அச் செயற்குழுக்களுக்குச் சொந்தமான 24 காணிகளின் சட்டபூர்வமான உரிமையை உரித்தாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பிரதேச செயலகங் களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக. | கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆலோசனையைப் பெற்று கமநல சேவைச் செயற்குழுக்களிடம் உள்ள காணிகளின் சட்டரீதியான உரிமையை செயற்குழுவின் பெயரில் மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 05 கமநல சேவைச் செயற்குழுக்களிடம் மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்கப்பெற்றிருந்த 381 காணிப் பெயர்ப் பட்டியல் திருத்த விண்ணப்பங்கள் திருத்தப்பட்டிருக்கவில்லை. | திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. | காணிப் பெயர்ப் பட்டியல்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், உரிய காலத்தில் கடமைகளை நிறைவேற்றாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 06 கமநல சேவைச் செயற்குழுக்களில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென அடையாளம் காணப்பட்டிருந்த 93 நீர்ப்பாசனத் திட்டங்கள் புனரமைக்கப்படாததன் காரணமாக, பெற்றுக்கொண்டிருக்கக்கூடிய சுமார் 1464.67 மெட்ரிக் தொன் நெல் அறுவடை இழக்கப்பட்டிருந்தது. | நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறாமையால் புனரமைப்புச் செய்ய முடியாமல் போனதுடன், நிதி கிடைத்தவுடன் புனரமைப்பு செய்யப்படுவதாக. | நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொண்டு புனரமைப்பு நடவடிக்கை களை முன்னெடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கமநல சேவைச் செயற்குழு அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேச விவசாயிகளின் விவசாயத் தேவைகளை நிறைவு செய்வதற்காக பிரதேச மட்டத்தில் கமநல சேவைச் செயற்குழுக்கள் நிறுவப்பட்டிருந்த போதிலும், 12 கமநல சேவைச் செயற்குழுக்களால் 03 மாதங்கள் முதல் 10 மாதங்கள் வரை எவ்விதக் கூட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்குழு உறுப்பினர்களைத் தொடர்பு கொள்ள முடியாமையால் கூட்டங்களை நடாத்த முடியாமல் போயிற்று. | கமநல சேவைச் செயற்குழு கூட்டங்கள் மாதாந்தம் வினைத்திறனான முறையில் கூட்டப்பட வேண்டும். |
| (ஊ) | 'Geo Goviya' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வயல் நிலங்களை அளவீடு செய்து முடித்திருக்க வேண்டும் என்ற போதிலும், 08 செயற்குழுக்களுக்குச் சொந்தமான 8738 காணிக் துண்டுகளின் அளவீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. | விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் ஆலோசனைகளைப் பெற்று எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | விரைவான வேலைத்திட்டம் ஒன்றின் மூலம் வயல் நிலங்களை அளவீடு செய்து நிறைவேற்ற வேண்டும். |
| (எ) | 06 செயற்குழுக்களுக்குச் சொந்தமான 236.44 ஹெக்டேயர் விவசாய மேட்டு நிலங்களைச் செய்கை பண்ணுவதற்கு விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | காணிகளை வினைத்திறனாகச் செய்கை பண்ணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | வினைத்திறனாகச் செய்கை பண்ண நடவடிக்கை எடுக்கப்பட வேணடியதுடன், முறையான மேற்பார்வையை மேற்கொள்ளாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | 04 செயற்குழுக்களிடம் 10,772.75 கிலோகிராம் உரம் பயன்படுத்தப்படாது தேங்கிக் காணப்பட்டது. | எதிர்வரும் கால போகங்களின் போது விவசாயிகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான பரிசோதனையை மேற்கொண்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது முறையான அனுமதியுடன் அவற்றை அகற்றுவதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | 10 செயற்குழுக்களினால் புனரமைக்கப்பட வேண்டுமென அடையாளம் காணப்பட்டிருந்த 206 நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. | முறையான வேலைத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுப் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) | புத்தல கமநல சேவைச் செயற்குழுவில் ரூபா 5,425 பெறுமதியான 31 மரக்கன்றுகள், | முகாமைத்துவத்தின் கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. | முறையான அனுமதியின் கீழ் அவற்றை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 32,385 பெறுமதியான 1182 கிலோகிராம் மானிய உரம் மற்றும் பெறுமதி குறிப்பிடப் படாத 808 கிலோகிராம் சந்தை விலை உரம் என்பன காலாவதியாகியிருந்ததுடன், அவற்றை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) | 05 கமநல சேவைச் செயற்குழுக்களில் 100.08 ஹெக்டேயர் வயல் நிலங்கள் செய்கை பண்ணப்படாததன் காரணமாக பெற்றுக்கொண்டிருக்கக் கூடிய சுமார் 119.99 மெட்ரிக் தொன் நெல் அறுவடை இழக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தின் கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. | விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களினால் முறையான செய்கை நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். |
| (ஔ) | தனமல்வில கமநல சேவை நிலையத்தில் 2022/2023 பெரும் போகம் முதல் 2023/2024 பெரும் போகம் வரை விவசாயிகளினதும் விவசாய அமைப்புகளினதும் தேவைகளினின்றிக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,925,263 பெறுமதியான 38,805 கிலோகிராம் உரமும், ஒக்கம்பிட்டிய கமநல சேவை நிலையத்தில் எவ்வித கட்டளையுமின்றி விற்பனை செய்து பணம் செலுத்தும் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 680,000 பெறுமதியான உரத் தொகுதியும் விற்பனையாகாமல் களஞ்சியத்தில் தேங்கிக் காணப்பட்டன. | முகாமைத்துவத்தின் கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. | தேவையான உரத்தின் அளவைச் சரியாக இனங்கண்டு கொள்வனவு செய்யப்பட வேண்டியதுடன் அவ்வாறு செயற்படாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனற்ற தன்மை**

**3.2.1 சொத்து முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 13 செயற்குழுக்களுக்குச் சொந்தமான ரூபா 9,136,532 பெறுமதியான 29 சொத்துக்களும் பெறுமதி குறிப்பிடப்படாத 32 சொத்துக்களும் 02 மாதங்கள் முதல் 18 வருடங்கள் வரையிலான காலப்பகுதியாகப் பயன்படுத்தப்படாமல் செயலற்றுக் காணப்பட்டன. | எதிர்காலத்தில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதற்கு அல்லது அவ்வாறு பயன்படுத்த முடியாவிடின் உரிய அனுமதி பெற்று அகற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | சொத்துக்களை உகந்த முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கமநல சேவை மாவட்ட அலுவலகம் மற்றும் கமநல சேவை செயற் குழுக்களுக்குத் தொடர்புடைய இரண்டு பதவிகளில் 04 ஊழியர்கள் மேலதிகமாகவும், 16 பதவிகளில் 189 ஊழியர்கள் வெற்றிடமாகவும் காணப்பட்டனர். | தலைமை அலுவலகத்தின் அறிவுறுத்தல்களின் படி நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர் மீளாய்வு ஒன்றினை மேற்கொண்டு அத்தியாவசியமான பணியாளர் வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். |

### 4. கணக்காய்வு மற்றும் நல்லாளுகை

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 11 கமநல சேவைச் செயற்குழுக்களால் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கு 04 நாட்கள் முதல் 03 மாதங்கள் 11 நாட்கள் வரை தாமதப்படுத்தியிருந்ததுடன், வெல்லவாய விவசாய வங்கியின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் குறித்த தினத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அதற்காக கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வழிநடத்தப்படுவார்கள். | குறித்த திகதியில் நிதிக்கூற்றுக் கள் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்யத் தவறிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 கமநல வங்கிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 1999 ஆம் ஆண்டு முதல் 2024 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் 18 செயற்குழுக் களால் 1301 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விவசாயக் கடன்களில் ரூபா 46,131,337, 07 செயற்குழுக்களால் 55 விவசாயி களுக்கு வழங்கப்பட்ட செயற் திட்டக் கடன்களில் ரூபா 2,948,548, 01 செயற் குழுவினால் 02 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொழில்முயற்சி கடன்களில் ரூபா 100,000, 07 செயற் குழுக்களால் 198 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விசேட சோளச் செய்கைக் கடன்களில் ரூபா 14,282,613 மற்றும் 05 செயற் குழுக்களினால் 197 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விவசாய உபகரணங்கள் மற்றும் | சட்ட நடவடிக்கை எடுத்தல், விவசாய தீர்ப்பாயத்திற்கு சமர்ப்பித்தல், அலுவலக விசாரணைகளை நடத்துதல் மற்றும் தெளிவுபடுத்தும் கடிதங்களை அனுப்புவதன் ஊடாக நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் வழங்கல் மற்றும் அவை சரியான நேரத்தில் அறவிடப்படாமை குறித்து முறையான விசாரணையை மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன், தொடர்புடைய ஒப்பந்தங்களின் பிரகாரம் கடன் தொகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏனைய கடன்களில் ரூபா 14,390,401 ஆக மொத்தம் ரூபா 77,852,899 இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2012 பெப்ரவரி 29 ஆம் திகதியிட்ட 04/2012 இலக்க சுற்றுநிருபத்தின் 1.6 (iii) இன் படி, வாழ்வாதார மட்டத்திலான விவசாயத்தை வணிக மட்டத்திற்கு உயர்த்துவதற்குத் தேவையான நிதி மற்றும் ஆலோசனை வசதிகளை வழங்குவது விவசாய வங்கிகளின் (புழளதையயெ டீயமெ) நோக்கமாகும். இருப்பினும், 2024 ஆம் ஆண்டில் 10 விவசாய சேவை குழுக்களின் கீழ் உள்ள 87 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு கடன் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு ஏற்ப, நிலவும் நிதி நிலவரத்தைக் கருத்திற்கொண்டு கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பெரும்பாலான பிரிவுகளில் விவசாயிகள் கடன் கோரிக்கைகளை முன்வைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வங்கிகள் நிறுவப்பட்ட நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக முறையான வேலைத்திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும். |
| (இ) | 10 கமநல சேவை அதிகாரப் பிரதேசங்களில் உள்ள 24,723 விவசாயக் குடும்பங்கள் கமநல வங்கியில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | அனைத்து விவசாயிகளையும் விவசாய வங்கி முறையினுள் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 11 கமநல சேவைச் செயற்குழுக்களில் 1991 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிய 47 கடன் நிலுவைகளின் பெறுமதியான ரூபா 29,968,217 அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | தாமதமின்றி அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், உரிய காலத்தில் கடனை அறவிடாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 03 கமநல சேவைக் குழுக்களில் 1999 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 199,677 நிலுவையான ஏக்கர் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | கமநல அபிவிருத்திச் சட்டம் மற்றும் சுற்றுநிருபங்களின் பிரகாரம் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், உரிய காலத்தில் அவற்றை அறவிடாத தரப்பினருக்கு எதிராக |

| | | | |
|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 07 கமநல சேவை குழுக்களில் 1993 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை நிலுவையில் உள்ள 26 கடன்பட்டோர் மீதிகளின் மொத்தத் தொகையான ரூபா 27,335,512 ஐத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | சம்பந்தப்பட்ட தரப்பினரை இனங்கண்டு அந்த நிலுவைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

,